Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | D.Khaliq Basha |
| Father's Name | Ghouse Basha |
| Village | Ambur |
| Taluk | |
| Caste | Muslim |
| Calling | Assistant Surgeon G.H. Ambur |
| Religion | Islam |
| Age | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.03.2025

MCOP.54/2021 PW3 Name:காலிக் பாஷா

முதல் விசாரணை

நான் நீதிமன்றத்திலிருந்து வந்துள்ள சாட்சி அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தில் இறந்துள்ள சின்னம்மாள் என்பவருக்கு ரபா மருத்துவனையில் நான் தான் சிகிச்சை அளித்தேன். 24.11.2020ல் அவர் எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார். 25.11.2020 அவர் மருத்துவனையிலிருந்து டிஸ்சார்ஜி செய்யபட்டார். அவருக்கு வலது இடுப்பு மூட்டு எலும்பு உடைந்திருந்தது. அவருக்கு மாவுகட்டு போடபட்டது. வலி மாத்திரைகள் எலும்பு சத்து மாத்திரையும் அவருக்கு கொடுத்து 1 மாதம் கழித்து வரசொல்லி டிஸ்சார்ஜ் செய்தோம். இடுப்பு எலும்பு உடைந்த காரணத்தினால் படுத்தபடுக்கையாக ஆகும்போது அதனால் ஏற்படகூடிய பின் விளைவுகளால் இறப்பு ஏற்படுவதற்கு 30 சதவீத வாய்ப்புகள் உள்ளது. இடுப்பு எலும்பை சுற்றி மற்ற பகுதியில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டதாக எந்த குறிப்புகளும் இல்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

24.11.2020ல் மாலை 4.50 மணிக்கு தான் சின்னம்மாள் எங்கள் மருத்துவனைக்கு வந்தார். அடுத்த நாள் இரவு 9 மணிக்கு டிஸ்சார்ஜி செய்யபட்டார். ஒருநாள் மட்டும் தான் சிகிச்சை பெற்றார். பின்னர் மீண்டும் சிகிச்சைக்கு வரவில்லை. அவருக்கு உடல்நிலை சரியான காரணத்தினால் கூட சிகிச்சைக்கு வராமல் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. அவருக்கு சர்க்க்ரை, ரத்தகொதிப்பு சம்மந்தமான ஆய்வு செய்தோம் என்பது தொடர்பாக குறிப்புகள் என்னிடம் இல்லை. அடிப்படை ஆய்வு எடுத்ததாக மட்டும் குறிப்பிடபட்டுள்ளது. எதன் காரணமாக அடிப்பட்டது என்பதை அவர் விவரமாக என்னிடம் கூறவில்லை. வயது மூப்பு காரணமாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்யமுடியாது என கூறியுள்ளோம். டிஸ்சார்ஜ் செய்யும்போது நல்ல நிலையில் உள்ளார் என ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு முன் வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளாரா என்ற விவரங்கள் கூறுவில்லை. மேற்படி காரணத்தினல் சின்னம்மாள் இறப்பதற்கு நேரிடையாக வாய்ப்பு இல்லை. மறைமுகமான வாய்ப்பு தான் உள்ளது. இறந்தவரின் உடற்கூராய்வு செய்யும் பட்சத்தில் இறப்பிற்கான காரணம் தெரியவரும். அடிப்பட்ட காயத்தினால் சின்னம்மாள் இறந்துள்ளார் என்று நான் உறுதியாக கூறமுடியாது. தொடர் சிகிச்சை எடுத்திருந்தால் அவர் இறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் அதுபற்றி முழுமையாக கருத்து கூறமுடியாது. சின்னம்மாளுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 12/03/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.03.12 15:42:57 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.